பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 15 திங்கட்கிழமை 01.11.2021 கதிர் 361

### இது ரகசியம் அல்ல!

அதிகாரம் கை மாறினால் நீதி முறைமைகளும் மாறும். இதுதான் இலங்கை நீதித்துறையின் நியதி போலும். நல்லாட்சி அரசில் கிரிமினல் குற்றச்சாட்டுக்கு இலக்கான உயர் மட்டத்தினர் பலருக்கு எதிரான குற்றப்பத்திரங்கள் இப்போது கோட்டா அரசில்

பக்கம்02

# விருப்பமில்லை என்றால் உடன் வெளியேறுங்கள்!



## விமல், கம்மன்பிலவுக்கு அரச தரப்பிலிருந்து பதில்

அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றோர் ஆளும் கட்சியின் கூட்டத்தில் ஒன்றைக் கூறிவிட்டு, வெளியில் சென்று இன்னுமொன்றைக் கூறுவதை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி என்ற வகையில் எம்மால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

- இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் ரோஹித அபேகுண வர்தன தெரிவித்தார். 2

## யாழ். - கொழும்பு ரயில் சேவை புதன் ஆரம்பம்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவை எதிர்வரும் 3ஆம் திகதி புதன்கிழமை மாலை ஆரம்பமாவுள்ளது 2

## மூன்றிலிரண்டு பெரும்பான்மை அரசு துண்டு துண்டாக உடையும் நிலையில்

### விரைவில் புதிய ஆட்சியமைப்போம் என்று சஜித் சூளுரை



மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்துவிட்டோம் என்று மார்தட்டிய அரசு, இன்று துண்டு துண்டாக உடையும்நிலையில் உள்ளது. மக்களுக்குத் துரோகமிழைத்த இந்த அரசு, ஆட்சி கவிழும் நாள்களை எண்ணிக்கொண்டிருக்கின்றது.


- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு ஏற்கனவே மக்களின் ஆணையைக் காட்டிக்கொடுத்துவிட்டது.

அரசு செல்லும் இந்த 2

## மேலும் 18 பேர் மரணம்



நாட்டில் மேலும் 18 பேர் கொரோனாத் தொற்றால் மரணித்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் 2

## கொடிகாமம் விபத்தில் வயோதிபர் உயிரிழப்பு

### இளைஞர் படுகாயம்

(ந.லோகதயாளன்)

யாழ்., கொடிகாமம் - கச்சாய் வீதியில் இடம்பெற்றவிபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அப்பகுதியைச் சேர்ந்த செல்லையா சற்குணநாதன் (வயது 78) எனும் வயோதிபரே உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் - கச்சாய் வீதி ஊடாக 2

## உள்ளுக்குள் கத்திக்கொண்டிருக்காமல் அரசைவிட்டு உடன் வெளியே வாருங்கள்

### விமல், கம்மன்பில அணியினருக்கு வெல்கம அழைப்பு

அரசில் இருக்கும் சிறிய கட்சிகளின் தலைவர்கள் கூறுவது போல், யுகதனவி உடன்படிக்கை தொடர்பான பிரச்சினை குறித்து தாம் கூறுவதை அரசின் தலைவர்கள் செவிமடுப்பதில்லை என்றால், அரசுக்குள் இருந்து கோஷமிடாது வெளியேற வேண்டியதையே சிறிய கட்சிகளின் தலைவர்கள் செய்ய வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் 2



## வடக்கில் இன்று தொடக்கம் பூஸ்டர்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் சுகாதாரத் துறையினருக்குக் கொரோனாத் தடுப்பூசியின் மூன்றாவது அலகு வழங்கும் பணி இன்று ஆரம்பிக்கப்படும் என்று 12

## தேவையற்ற பயணங்களை மேற்கொள்ள பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படவில்லை



### சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசனம்

வினோத பயணங்கள் அல்லது வேறு அவசியமற்ற பயணங்களை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகளைத் தளர்த்தவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களுக்காக அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றி 12

## சுகாதார விதிமுறைகளை மீறினால் மீண்டும் ஆபத்து

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை



மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை நீக்கப்பட்டுள்ள நிலையில், பொதுமக்கள் முறையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாவிட்டால் நாடு மீண்டும் ஒரு துரதிஷ்டமான நிலைக்குச் செல்லும் என்று இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் 2

## இனி இது .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விலக்கிக் கொள்ளப்படுகின்றன. அந்த உயர் மட்டத்தினர் தொடர்பான கிரிமினல் குற்றங்களை விசாரித்து வழக்குத் தொடுத்த புலனாய்வாளர்களையும் விசாரணையாளர்களையும் இப்போது அரசியல் பழிவாங்கல் வழக்குகளில் சிக்க வைக்கும் ஆயத்தங்கள் நடக்கின்றன என்றும் தெரிகின்றது. இப்போக்கு தென்னிலங்கை மட்டத்தில் மட்டுமல்ல, இங்கு வடக்கு கிழக்கிலும் கூட உண்டு.

மன்னார் பிரதேச சபைத் தலைவராக இருந்தவரின் பதவி இதற்கு முன்னர் இருந்த வடக்கு ஆளுநரால் வெற்றும் வறிதுமாக்கப்பட்டமை தெரிந்ததே. சட்ட விரோதமான முறையில் மாடுகளை ஏற்றிச் சென்ற டிராக்டர் ஒன்றை பொலிஸார் வழிமறித்துத் தடுத்து வைத்திருந்த போது, அது பிரதேச சபையின் வாகனம் என்று நீதிமன்றுக்குத் தவறான தகவல்களை வழங்கி, அந்த டிராக்டரை பிரதேச சபைத் தலைவர் விடுவித்தார் என்று அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அது குறித்து ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரை விசாரணையாளராக நியமித்து விசாரணை நடத்தினார் முன்னாள் ஆளுநர். விசாரணை அறிக்கையின் பிரகாரம் அந்தப் பிரதேச சபை தலைவரின் பதவியும் சபை உறுப்புரிமை அங்கத்துவமும் வெற்றும் வறிதுமாக்கப்பட்டன என ஆளுநர் வர்த்தமானி மூலம் அறிவித்தார். அது குறித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியானமையை அடுத்து புதிய பிரதேச சபைத் தலைவர் தெரிவானார். எனினும் அதுவரை பிரதேச சபைத் தலைவராக இருந்தவர் நீதிமன்றுக்கு சென்றமையால், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தலைவரின் பெயரை வர்த்தமானியில் வெளியிடுவதற்குத் தடை விதித்து இடைக்கால உத்தரவு மன்றினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இப்போது விவகாரம் நீதிமன்றத்தின் முன்னால் உள்ளது.

பிரதேச சபைத் தலைவர் பதவியையும் உறுப்பினர் அங்கத்துவத்தையும் இழந்த மேற்படி நபர் ரிஷாத் பதியுதீனின் எம்.பியின் நம்பிக்கைக்குரிய ஆள் என்று கூறப்படுகின்றது. அதனால் அவருக்காக பரிந்து கொண்டு புதிய வடக்கு ஆளுநருடன் பேசியிருக்கின்றார் ரிஷாத் பதியுதீன் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. 'ஆகட்டும், பார்க்கலாம்' - என்று காமராஜர் பாணியில் புதிய ஆளுநர் சம்மதம் தந்திருக்கின்றார் என்றும் தகவல். இனி என்ன, பழைய ஆளுநர் விடுத்த வர்த்தமானி அறிவித்தல், புதிய ஆளுநரால் வாபஸ் பெறப்பட, பழைய பிரதேச சபைத் தலைவர் பழைய கதிரையில் போய் அமர்வார் என்று கூறப்படுகின்றது. இதுதான், இலங்கையின் மெச்சத் தகுந்த நீதி முறைமை போலும்.

பார்ப்போம் என்ன நடக்கின்றது என்று...!

****

'வேலியே பயிரை மேய்வது' என்று கூறுவார்கள். அதுபோல, 'திருடனைத் தலையாரி ஆக்குவது' என்பது பற்றியும் பேசப்படுவது உண்டு. அப்படிப்பட்ட ஒரு திடுக்கிடும் தகவல் இது:-

மேல் மாகாணத்தில் போதை பொருள் பாவனைக்கு அடிமையான 37 பொலிஸ் அதிகாரிகளின் பெயர் பட்டியலை பொலிஸ் மா அதிபர் விக்ரமரத்ன உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாக மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு அனுப்பி வைத்திருக்கிறார் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

அவர் அந்தப் பட்டியலை உரிய நடவடிக்கைக்காக கொழும்புப் பிராந்தியம், களுத்துறைப் பிராந்தியம், மேல்மாகாண தெற்குப் பிராந்தியம் மற்றும் வடக்கு பிராந்திய ஆகியவற்றுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கு அனுப்பியிருக்கிறார். இவர்களின் இருபத்தி எட்டு பேர் கொழும்புப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். ஆறு பேர் களுத்துறைப் பிராந்தியத்தை சேர்ந்தவர்கள். இருவர் மேல் மாகாணத்தின் வடபிராந்தியத்தையும், ஒருவர் மேல் மாகாணத்தின் தெற்குப் பிராந்தியத்தையும் சேர்ந்தவர்கள்.

மேற்படி முப்பத்தியேழு பொலிஸ் அதிகாரிகளையும் விசாரணை செய்து, மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி, அவர்கள் போதை வஸ்துக்கு அடிமையாகியுள்ளார்களா என்பதைக் கண்டறியும் படி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் உத்தரவிட்டிருக்கிறார் என்றும் தெரிகின்றது. சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் எத்தகைய போதைப் பொருளைப் பயன்படுத்துகிறார்கள் என்ற விவரமும் கூட மேலதிகாரிகளுக்குத் தெரியபடுத்தப் பட்டுஇருப்பதாகக் கூறப்படுகின்றது. போதை வஸ்துப் பாவனை பொலிஸாருக்குள்ளும் ஊடுருவி விட்டது. அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது நெருக்கடியாகத்தான் இருக்கப் போகின்றது...!

- மின்னல் -

## விருப்பமில்லை என்றால் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் என்ற வகையில் எமக்கு கூட்டுப் பொறுப்பு உள்ளது. கட்சிக் கூட்டத்தில் ஒன்றைக் கூறிவிட்டு வெளியில் சென்று இன்னுமொன்றைக் கூறும்போது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி என்ற வகையில் எம்மால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

நாங்களே பிரதான தாய்க் கட்சி என்பதே இதற்குக் காரணம். எமது கட்சி அடிபணிய விரும்பாது. நாய்தான் வாலை ஆட்ட வேண்டும், வால் நாயை ஆட்டாது என்பதை நாங்கள் தெளிவாகக் கூற வேண்டும்.

சத்தங்களைக் கண்டு நாங்கள் அஞ்ச மாட்டோம். எமக்கும் அந்தப் பட்டறையின் சத்தம் பழக்கமானது. இரும்புச் சத்தமும் பழக்கமானது. வாள்களின் சத்தமும் பழக்கமானது.

பொறுத்தமில்லை என்றால் என்ன செய்ய வேண்டும், விவாகரத்துச் செய்ய வேண்டும். பெண் விரும்பும் நபரை மணமுடிப்பதற்காக விவாகரத்துச் செய்ய முடியும். ஆண் விரும்பிய பெண்ணை மணந்து கொள்ள முடியும் - என்றார்.

## யாழ். - கொழும்பு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என யாழ். ரயில் நிலையப் பிரதான ரயில் நிலைய அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று அபாய நிலை காரணமாக நாடு பூராகவும் ரயில் சேவை நிறுத்தப்பட்டது. அதன்போது, யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவையும் நிறுத்தப்பட்டது.

கல்கிஸை - காங்கேசன்துறைக்கு இடையிலான ரயில் சேவை எதிர்வரும் 3ஆம் திகதி மாலை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் மூன்றாம் திகதி மாலை 5.30 மணிக்கு கல்கிஸையில் இருந்து புறப்படும் ரயில் காங்கேசன்துறையை வந்தடைந்து மறுநாள் 4ஆம் திகதி காலை 5.30 மணியளவில் காங்கேசன் துறையிலிருந்து புறப்பட்டுக் கொழும்புக்குப் பயணிக்கவுள்ளது

எனினும், முற்பதிவு தொடர்பான எந்த வித தகவல்களும் இதுவரை அறிவிக்கப் படவில்லை. எனவே, எதிர்வரும் 3ஆம் திகதி ஆரம்பமாகும் ரயில் சேவையானது வழமைபோல் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஒரு சேவையும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு சேவையுமாக சாதாரண ரயில் சேவை மாத்திரமே முதலில் ஆரம்பிக்கப்படவுள்ளது - என்றார்.

## மூன்றிலிரண்டு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அழிவான பயணத்தை ஐக்கிய மக்கள் சக்தியால் மாத்திரமே பின்நோக்கித் திருப்ப முடியும்.

அரசால் அநீதி இழைக்கப்பட்ட விவசாயிகள், இன்று எம்மிடம் நீதி கேட்கின்றார். விரைவில் அமையவுள்ள எமது புதிய ஆட்சியில் விவசாயிகளுக்கு நீதியை வழங்கியே தீருவோம்.

சேர் ஜோன் கொத்தலாவல அன்று நாட்டின் விவசாயிகளின் முன்னேற்றத்துக்காகப் பெரும் பங்களிப்பைச் செய்தார். ஹரியால உள்ளிட்ட பிரதேசங்களில் விவசாயக் குடியேற்றங்களை ஏற்படுத்த அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார் - என்றார்.

## மேலும் 18 பேர் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர்களில் 10 ஆண்களும், 8 பெண்களும் அடங்குகின்றனர். இவர்கள் அனைவரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 743 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, நாட்டில் மேலும் 542 கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 41 ஆயிரத்து 73 அதிகரித்துள்ளது.

இதனிடையே நாட்டில் மேலும் 317 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். இதனடிப்படையில் இதுவரை 5 லட்சத்து 12 ஆயிரத்து 798 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

## உள்ளுக்குள் கத்திக் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார். ஊடகங்களிடம் அவர் மேலும் தெரி விக்கையில் -

அரசின் தீர்மானங்களை அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் மற்றும் அதில் இருப்போருக்குத் தெளிவுபடுத்துவதில்லை என்றால், அவர்கள் கூறுவதைக் கேட்பதில்லை என்றால், அதற்குள் இருக்காமல் வெளியில் வாருங்கள். உள்ளே இருந்து கத்திக்கொண்டிருக்காமல் வெளியே வாருங்கள்.

அமைச்சுப் பதவிகள் மிகப் பெரிய விடயங்களா? அமைச்சுப் பதவிகள் என்றும் நிலைத்திருக்குமா? இல்லை. மக்களுக்காக வீதியில் இறங்கி குரல் கொடுக்க அமைச்சுப் பதவிகள் தேவையில்லை.

மக்களுக்காக வேலைகளைச் செய்ய அமைச்சுப் பதவிகளோ, அரச அதிகாரமோ தேவையில்லை. வெளியில் வந்தால், நாம் அனைவரும் இணைந்து, குரல் எழுப்பி நாட்டைச் சிறந்த இடத்துக்குக் கொண்டு வர முடியும் -என்றார்.

## கொடிகாமம் விபத்தில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்றிரவு மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர், சைக்கிளில் பயணித்த குறித்த வயோதிபரை மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கிருஷ்ணகுமார் சுகிந்தன் (வயது 27) எனும் இளைஞரையும், வயோதிபரையும் அங்கிருந்தவர்கள் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி வயோதிபர் உயிரிழந்த நிலையில், இளைஞர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார். குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சுகாதார விதிமுறைகளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன் தலைவர் உபுல் ரோஹண ஊடகங்களுக்கு இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சில பகுதிகளில் கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் அதிகரிப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

எனவே, பொதுமக்கள் தற்போதைய நிலைமையைப் புரிந்துகொண்டு சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கொரோனாத் தொற்றுநோயைத் தொடர்ந்து பல மாதங்களாக விதிக்கப்பட்டிருந்த மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகள் நேற்று நீக்கப்பட்டுள்ளன.

இதன்படி இன்று முதல் பொது போக்குவரத்துச் சேவைகள் வழமை போன்று இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் முறையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாவிட்டால் நாடு மீண்டும் ஒரு துரதிஷ்டமான நிலைக்குச் செல்லும்.

எனவே, பொதுமக்கள் முறையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றா விட்டால் நாடு மீண்டும் ஒரு துரதிஷ்டமான நிலைக்குச் செல்லும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



# சர்வதேச மக்கள் தீர்ப்பாயத்தில் விசாரணைக்கு வருகிறது ஊடகவியலாளர் லசந்த படுகொலை

சண்டேலீடர்பத்திரிகையின்முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பான விசாரணைகளை சர்வதேச மக்கள் தீர்ப்பாயத்தின் ஊடாக முன்னெடுப்பதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், அதன் முதற்கட்ட விசாரணைகள் நாளை (செவ்வாய்கிழமை) ஆரம்பமாகின்றன.

சர்வதேச ரீதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களின் படுகொலைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு நீதியை நிலைநாட்டும் நோக்கில், வரையறுக்கப்படாத சுதந்திர ஊடகம், எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு மற்றும் ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான அமைப்பு ஆகிய மூன்று சர்வதேச அமைப்புக்கள் இணைந்து கடந்த செப்ரெம்பர் மாதம் 'ஊடகவியலாளர்களின் படுகொலை தொடர்பான மக்கள் தீர்ப்பாயம்' என்ற கட்டமைப்பை ஸ்தாபித்தன.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், அவைதொடர்பான ஆதாரங்களைத் திரட்டுதல் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஆதரவு வழங்குவதுடன் அவர்களுடைய கதைகளைக் கேட்டறிந்து பதிவுசெய்தல் ஆகியவற்றின் ஊடாகக் குற்றமிழைத்த அரசாங்கங்களை சர்வதேச சட்டங்களுக்கு அமைவாகப் பொறுப்புக்கூறச்செய்தல் ஆகியவையே இந்த மக்கள் தீர்ப்பாயத்தின் பணிகளாக அமையும் என்று அவ்வமைப்புக்கள் விளக்கமளித்திருந்தன.

அதன்பிரகாரம் முதலில் ஊடகவியலாளர்களான லசந்த விக்ரமதுங்க, மிக்குவேல் ஏஞ்சல் லோபேஸ் வெலஸ்கோ மற்றும் நபீல் அல் ஷர்பாஜி ஆகியோரின் படுகொலைகள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்குத் தவறியமைக்காக இலங்கை, மெக்சிகோ மற்றும் சிரியா ஆகிய நாடுகளின் அரசாங்கங்கள்மீது ஊடகவியலாளர்களின் படுகொலை தொடர்பான மக்கள் தீர்ப்பாயம் குற்றஞ்சுமத்தியிருந்ததுடன் இந்தச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கப்போவதாகவும் ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்நிலையில் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பான முதற்கட்ட விசாரணைகள் நாளை (செவ்வாய்க்கிழமை) நடைபெறவிருப்பதுடன் மனித உரிமைகள் குறித்த பிரபல வழக்கறிஞரான அல்முடெனா பெர்னாபேயூ இந்த முதற்கட்ட வழக்கு விசாரணைகளை வழிநடத்தவுள்ளார். அதுமாத்திரமன்றி ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டவல்லுநர்கள் அடங்கிய உயர்மட்டக்குழுவின் உறுப்பினரான பாரோனெஸ் ஹெலெனா கென்னடி இதன்போது விசேட உரையொன்றையும் நிகழ்த்தவிருக்கிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது.



அதேவேளை இதுதொடர்பாக எழக்கூடிய சந்தேகங்களுக்கான தெளிவுபடுத்தல்களை வழங்கும் நோக்கில் இன்று (திங்கட்கிழமை) சர்வதேச ரீதியிலான ஊடகவியலாளர் சந்திப்பொன்றும் நிகழ்நிலையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடும் மழையால் புத்தளம் பகுதி வெள்ளத்தினால் மூழ்கியுள்ளது

நேற்று மாலை முதல் பெய்த கடும் மழையின் காரணமாக புத்தளம் பகுதி வெள்ளத்தினால் மூழ்கியுள்ளது.

புத்தளம் நகரின் நூர்நகர், கடையாக்குளம் பகுதிகள் வெள்ளத்தால் மூழ்கின.

வீடுகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்தமையால் சுமார் 150 இற்கும் அதிகமான குடும்பங்கள் இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.




## இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளினால் வண்ணாத்திவில்லு பொலிஸ் பொறுப்பதிகாரி கைது

சிலாபம், கரவிடாகார பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவரால் முன்வைக்கப்பட்டிருந்த முறைப்பாட்டுக்கமைய இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த வியாழக்கிழமை மாலை வண்ணாத்திவில்லு பொலிஸ் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டிருந்தார்.

புத்தளம் – கபடா மாவத்தையில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஹோட்டலொன்றில் வைத்து இவர் கைது செய்யப்பட்டிருந்தார். இவ்வாறு முறைப்பாட்டை முன்வைத்துள்ள பெண் வண்ணாத்தில்லு பிரதேசத்தைச் சேர்ந்த நபரைத் திருமணம் செய்துள்ளமையுடன், அதன் பின்னர் ஏற்பட்ட குடும்பப் பிரச்சினையில் குறித்த பெண்ணும் அவரது கணவரும் தனித்தனியாக வாழ்ந்து வந்துள்ளனர்.

இதன் காரணமாகக் கணவருக்கும் மனைவிக்கும் இடையில் தொடர்ச்சியாக முரண்பாட்டு நிலைமை இருந்துவந்துள்ளது. இதுதொடர்பில் வந்த பல்வேறு முறைப்பாடுகள் வண்ணாத்திவில்லு பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்டு வந்துள்ளது. ஒரு சந்தர்ப்பத்தில் குறித்த பெண்ணை கைதுசெய்து விளக்கமறியலில் வைக்க வண்ணாத்திவில்லு பொலிஸ் பொறுப்பதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*Jaffna College Institute of Technology*
*Calls for the following courses*

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## தலையிடிக்கு மேல் தலையிடி

**ஆளும் மொட்டுக் கூட்டமைப்பின் உள்வீட்டுச் சண்டை நன் றாகச் சூடு பிடித்து இருக்கின்றது. விவகாரம் பொது வெளியில் ஆராயப்படுவதற்கான பேசுபொருளாக மாறி யிருக்கின்றது. அமைச்சரவை தீர்மானங்களை விமர் சித்தமை மூலம் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை பங்காளிக் கட்சித் தலைவர்கள் மீறியுள்ளனர், அதனால் அவர்களை அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும் என்று ஆளும் பொதுஜன கூட்டமைப்பின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி இருக்கின்ற னர். இது தொடர்பில் அவர்கள் தமக்குள் அவசர கலந் துரையாடல் ஒன்றையும் நடத்தியுள்ளனர்.**

**அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்கார, விமல் வீர வன்ஸ, உதய கம்மன்பில்ல போன்றோரே வீட்டுக்கு அனுப் பப்பட வேண் டும் என்று ஆளுங்கட்சி பின்வரிசை எம்.பிக் கள் கூறுகின்ற னர். இது தொடர்பில் உடனடியாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தவும், தற்போது பிரிட்டன் சென்றிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சில தினங்களில் நாடு திரும்பியதும் அவருடன் பேசவும் ஆளும் தரப்புப் பின்வரிசை எம்.பிக்கள் தீர்மானிக்கின் றனர் என்று கூறப்படுகின்றது. ஆனாலும் கெரவலபிட்டிய யுகதனவி மின்னுற்பத்தி நிலையப் பங்குகளை அமெ ரிக்க நிறுவனத்திற்கு கை மாற்றுவது தொடர்பான விட யத்தில் அமைச்சரவையில் தீர்மானமே எடுக்கப்பட வில்லை, பின் கதவால் தீர்மானம் எடுக்கப்பட்ட மாதிரி அமைச்சரவைக் கூட்ட அறிக்கைகள் பதியப்பட்டன என்று ஆளும் மொட்டுக் கூட்டணியின் பங்காளிக் கட்சித் தலை வர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.**

**ஆக, அமெரிக்க நிறுவனத்திற்குப் பங்குகளை மாற்றும் தீர்மானம் அமைச்சரவையில் உண்மையில் எடுக்கப்பட் டதா, இல்லையா என்பதுதான் இப்போது சூடுபிடிக்கும் விவகாரமாகியுள்ளது. அமைச்சரவையில் தீர்மானிக்கப் படாத ஒரு விடயத்தில், அமைச்சரவை முடிவை மீறியதா கக் கூறுவது அபத்தம் என்கின்றது பங்காளிக் கட்சிக ளின் தரப்பு.**

**மறுபுறத்தில் அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் அதனை எதிர்த்துப் பகிரங்க வெளியில் பொதுமக்களுக் குக் கருத்து வெளியிடுவது அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பை மீறும் செயல் என்கிறது மொட்டுக் கூட்டணி யின் பிரதான கட்சி.**

**எது, எப்படி என்றாலும் இப்போது பிரிட்டன் சென்றிருக் கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியதும், ஆளுங்கட்சிக் கூட்டமைப்பில் கிளம்பியிருக்கும் நெருக் கடி தொடர்பில் அதிரடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டி யவராக இருக்கிறார் என்பது தெளிவாக தெரிகிறது.**

**'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்' என்பார்கள். அந்த மாதிரி பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் பங்காளிக் கட்சிகளின் ஆதரவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இழக்க வேண்டி நேரும். மறுபக்கத்தில் ஆளும் கூட்டணியின் பின்வரிசை எம்.பிக் களின் கோரிக்கையை நிறைவு செய்யாமல் ஜனாதிபதி தட்டிக் கழிப்பாராயின் ஆளும் தரப்புக்குள் அவர் நெருக் கடியை எதிர்கொள்ள வேண்டி நேரும். 'சும்மா இருந்த சங்கை ஊதி கெடுத்தானாம் ஆண்டி' என்பதுபோல கெர வலப்பிட்டிய மின்நிலையப் பங்குகளை, அவசரப்பட்டு அமெ ரிக்க நிறுவனத்திற்கு மாற்றி, கோட்டாபயவுக்கு தலையி டிக்கு மேல் தலையிடியை வாங்கிக் கொடுத்திருக்கிறார் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ.**

**ஏற்கனவே நாட்டில் பொருளாதார நெருக்கடி, பணவீக் கம், விலைவாசி உயர்வு, கொரோனாத் தொற்று நெருக் கடி, உரத்தட்டுப்பாடு, விவசாயிகள் போராட்டம், அதிபர் கள் – ஆசிரியர்களின் போராட்ட அறிவிப்பு என்று பல சிக்கல்களில் அல்லாடும் கோட்டாபய ஆட்சி பீடத்துக்கு உள்வீட்டுக் குழப்பம் பெரும் தலைவலியாய் வந்து சேர்ந் திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.**

# கார்த்திகை மாதத்தில் காந்தளின் துளிர்ப்பைப்போல நம்பிக்கையின் விதைப்பாக மரங்களை நாட்டுவோம்!

## சூழலியலாளர் ஐங்கரநேசன் வேண்டுகோள்



பொருத்தமான காலத்துக்காக நிலத்தின் கீழ் காத்துக் கிடக்கும் கார்த்திகை விதைகள் கார்த்திகை மாதத்தின் வரவோடு உறக்கம் கலைந்து புதுப்பலம் பெறுகின்றன. நிலத்தைக் கீறி வெளியேறி மஞ்சள், சிவப்பு வண்ணாங் களில் நம்பிக்கை ஒளியாகப் பூத்துக் குலுங் குகின்றன. நாமும் இந்தக் கார்த்திகை மாதத் தில் காந்தளின் துளிர்ப்பைப்போல, எதிர்காலம் குறித்த நம்பிக்கையின் விதைப்பாக மரங் களை நாட்டுவோம் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் தீர்மானத் துக்கு அமைவாக ஆண்டு தோறும் கார்த் திகை மாதம் மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக் கப்படுகிறது. இதனை முன்னிட்டு பொ.ஐங்கர நேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையி லேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு -

உலகம் என்றும் இல்லாதவாறு எதிர்காலம் குறித்த பெரும் நம்பிக்கையின்மையை எதிர் கொண்டுள்ளது. கொரோனாப் பெருங் கொள் ளைநோயும், வீறு கொண்டெழும் காலநிலை மாற்றமும் கூட்டாகத் தாக்குதலைத் தொடுத்தி ருப்பதில் நாடுகள் யாவும் நிலைகுலைந்து போயுள்ளன. ஏழை - பணக்கார நாடுகள் என்ற பேதமின்றி எல்லா நாடுகளினதும் பொருளாதாரப் பலம் ஆட்டம் கண்டு வருகின் றது. இவற்றைச் சரிவரக் கையாள இயலாத நிலையில் நாடுகளின் அரசியல் வலுவும் கேள்விக்குறியாகியுள்ளது.

காட்டு விலங்குகளில் உறையும் வைர ஸ்'க்கள் விகாரமுற்றுத் தாக்கியதால் கொடுங் கொரோனாத் தொற்றும், பூமி சூடாகித் தகிப்ப தால் காலநிலை மாற்றமும் ஏற்பட்டிருப்பது அறிவியல் பூர்வமாக நிரூபணமாகியுள்ளது. காட்டு விலங்குகளை அவற்றின் இயல்பான வாழிடங்களில் இருந்து அள்ளுகொள்ளை யாகக் கடத்துவதன் மூலமும், கரிக்காற்றை உறுஞ்சுகின்ற காடுகளைக் கணக்கின்றிக் கபளீகரம் செய்வதன் மூலமும் இப் பேரிடர் களுக்கு மனிதர்களாகிய நாமே காரணமா கியுள்ளோம். இந்தப் பேரிடர்கள் 'இயற்கையை நாம் அழித்தால் இயற்கையால் நாம் அழி வோம்' என்ற பாடத்தை எமக்கு வலுவாகப் போதித்திருக்கும் நிலையில், இப்போது சூழல் பாதுகாப்பினதும் மர நடுகையினதும் அவசி யம் அதிகம் உணரப்பட்டுள்ளது.

நானிலம், ஐந்திணை என்று இயற்கை யோடு இயைந்து வாழ்ந்த தமிழர்கள் மரபு வழிபாட்டைத் தமது தொல் வழிபாட்டு முறையாகக் கொண்டிருந்தவர்கள். இறந்த வர்களின் நினைவாக மரங்களை நடுகை செய்து அவற்றை உயிருள்ள நினைவுச் சின்னங்களாகப் போற்றிய பண்பாட்டு மரபைக் கொண்டிருந்தவர்கள். போர்க்கால நெருக்கடிகளி லும் இயற்கையை நண்பனாக நேசித்துச் சூழல் காத்தவர்கள். ஆனால், இன்று பேரினத் துவ அரசியலாலும், உலக மயமாக்கலாலும் இயற்கை வளங்களைக் காவு கொடுத்து நிற்கின்றனர்.

பொருத்தமான காலத்துக்காக நிலத்தின் கீழ் காத்துக் கிடக்கும் கார்த்திகை விதைகள் கார்த்திகை மாதத்தின் வரவோடு உறக்கம் கலைந்து புதுப் பலம் பெறுகின்றன. நிலத்தைக் கீறி வெளியேறி மஞ்சள், சிவப்பு வண்ணாங் களில் நம்பிக்கை ஒளியாகப் பூத்துக் குலுங்குகின்றன. நாமும் இந்தக் கார்த்திகை மாதத்தில் காந்தளின் துளிர்ப்பைப்போல, எதிர்காலம் குறித்த நம்பிக்கையின் விதைப் பாக மரங்களை நாட்டுவோம். 'ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறு வோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# சர்வதேச மனிதாபிமான சட்ட பயிற்சிப் பட்டறையில் பங்கேற்கும் 400 சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள்

## இலங்கையிலிருந்து அறுவர் செல்கின்றனர்

சர்வதேச மனிதாபிமான சட்டம் என்று அழைக்கப்படும் போர்ச் சட்டங்கள், இராணுவ நடவடிக்கையின்போது நடைமுறைப்படுத்தல் தொடர்பில் உயர்மட்ட பயிற்சிப்பட்டறையில் இலங்கைப் படையினர் உட்பட்ட 400 சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

சுமார் 90 இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து இராணுவ அதிகாரிகள், அடுத்த மூன்று வார காலப்பகுதியில் இடம்பெறும் இந்தப் பயிற்சிப்பட்டறையில் பங்கேற்கவுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் இந்தப் பட்டறை நடத்தப்படவுள்ளது. கூட்டு இராணுவ நடவடிக்கைகள் மற்றும் போர்க்கள நடத்தை மீதான தாக்கங்கள் என்பவை தொடர்பில் இந்த பயிற்சிப்பட்டறை கவனம் செலுத்தவுள்ளது.

பங்கேற்பாளர்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் உருவாக்கப்பட்ட புதிய காணொலி உருவகப்படுத்துதலைப் பயன்படுத்துவார் கள். இது அதிகாரிகள் மற்றும் வீரர்களை நிஜ வாழ்க்கையைப் போன்ற காட்சிகளில் காட் டும்.

அங்கு இராணுவ நோக்கங்கள் பொது மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் அபாயத் துக்கு எதிராகச் சமநிலைப்படுத்தப்பட வேண் டும் என்பது வலியுறுத்தப்படும்.

இந்தநிலையில் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஆசிய பசுபிக் பிராந்தி யத்துக்கான செயலமர்வில் இலங்கையின் 6 சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பங்கேற் கவுள்ளனர்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021

"மரங்களை நாட்டுவதற் கான மிகச் சிறந்த காலம் 20 வருடங்களுக்கு முன்னர் இருந் தது. அடுத்த நல்ல நாள் இன் றாகும்."

– சீனப் பழமொழி



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல் – 2022

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ் பல்கலைக்கழகத்துடன் தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2021 டிசம்பர் 04ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**1. பாவனைபொருட்கள் காகிதாதிகள்**
1.1 எழுதுபொருட்கள், காகிதாதிகள். **(Toner, Cartridge ,Printer Ribbon,Printer paper,etc...)**
1.2 வெட்டும் கருவிகள், மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.
1.3 சுகாதாரசேவைவழங்கல்:- தும்புதடி, விளக்குமாறு, கால்துடைப்பங்கள், ஹார்ப்பிக், விம், சுத்திகரிப்பு மற்றும் மெதுகூட்டல் பொருட்கள் முதலியன.
1.4 மழைக்கோட்டுக்கள், சேற்றுசப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.

**2. புத்தகம், புத்தகம் கட்டுதல், அச்சிடுதல்.**
2.1 அச்சிடுதல், புளொக்செய்தல், ரப்பர் முத்திரைகள், திகதிமுத்திரைகள்.
2.2 புத்தகங்கள், பருவவெளியீடுகள் ஏனைய வெளியீடுகள்.
2.3 புத்தகங்களையும், பருவவெளியீடுகளையும் கோர்த்தல்.

**3. தளபாடங்கள் அலுவலக இயந்திரங்கள்**
3.1 அலுவலகதளபாடம் - மரம் உருக்கு - கணினிமேசை, கதிரைகள்.
3.2 அலுவலகஉபகரணங்கள் (இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், நிழற்பிரதி இயந்திரங்கள், தொலைநகல் கருவிகள் முதலியன).
3.3 தீயணைப்புசாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்.

**4. கட்டிட பொருட்கள் / பராமரிப்பு பொருட்கள் மற்றும் கருவிகள்**
4.1 சகலவகையானகட்டடநிர்மாணபொருட்கள்.
a. பெயின்டுகள் வாணிஸ், தொடர்பானபொருட்கள்.
b. கட்டிட நிர்மாண தேவைகளுக்கான அனைத்துவிதமான பொருட்களும். (மணல், கிரவல், மற்றும் கல் தொடர்பானவை)
c. இயந்திரகருவிகளும் உதிரிப்பாகங்களும்.
d. பைப்புகள், பைப் இணைப்புகள்.
e. மரங்கள் - தீராந்தி,பனைமரம், சலாகைகள்.
f. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் உற்பத்திகள்.
g. அலுமினியம் பொருத்துகள், மட்பாண்டப் பொருள்கள் கண்ணாடிப் பொருட்கள், கண்ணாடிகள்.
h. குளியலறைபொருத்துகள், சுவர், தரைமாபிள்கள்.
i. ஈரத் தடைப்பொருட்கள்.
j. கழிவுநீர் சீராக்கி தொகுதி பராமரிப்புக்கான பொருட்கள்.
k. குடிநீர் சீராக்கி தொகுதி பராமரிப்புக்கான பொருட்கள்.

**5. மின்னியல் பொருட்கள்**
மின்சாரசாதன உபகரணங்களும் மற்றும் உதிரிப்பாகங்களும்.

**6. ஆய்வு கூட பொருட்கள் / சாதனங்கள்.**
6.1 ஆய்வு கூடச் சாதனங்கள்
6.2 ஆய்வு கூட இரசாயனபொருட்களும் கண்ணாடிச் சாதனங்களும்.

**7. வாகனபராமரிப்பு**
7.1 டயர் ரியுப்புகள், பற்றரிகள்.
7.2 மோட்டார் உதிரிப்பாகங்கள், துணைஉறுப்புகள்.
7.3 மோட்டார் வாகனம் திருத்துதல்
7.4 மோட்டார் வாகன உள்ளக வேலைகள்.

**8. பொதுசேவைகள் வழங்கல்கள்**
8.1 ஆயுர்வேதமருந்துகள் உட்பட மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
8.2 விளையாட்டு மற்றும் நலன்புரிபொருட்கள்.
8.3 புடவைகள், ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்.
8.4 தோட்டவேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள் கருவிகள், இயற்கைஉரம், பூங்கன்றுகள் மற்றும் செடிகள்.
8.5 அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் - தட்டச்சு இயந்திரங்கள், புகைப்படபிரதிபண்ணும் இயந்திரங்கள், தொலைநகல், கணனி, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், மின் தட்டச்சு இயந்திரங்கள் போன்றவற்றின் திருத்தவேலைகள்.
8.6 உருக்கு, மரத் தளபாட திருத்த வேலைகளும் மெருகூட்டல் வேலைகளும்.
8.7 கதிரைகள் பின்னுதல்.
8.8 உடைகள் கதவு ஜன்னல் திரைச்சீலைகள் தைத்தல்.
8.9 உடைகளைச்சலவைசெய்தல்.
8.10 சுத்திகரிப்பு சேவை வழங்கல்.
8.11 பாதுகாப்பு சேவை வழங்கல்.
8.12 பொதிகள் பரிமாற்று / சுங்க தீர்வைகள் சேவை.
8.13 நிகழ்வுகள் நிர்வகிப்பு சேவை.
8.14 உணவு வழங்கல் சேவை.
8.15 வீடியோ மற்றும் புகைப்பட சேவை.
8.16 வாடகை அடிப்படையில் ஒலி மற்றும் ஒளி உபகரணங்கள் வழங்கல்.
8.17 பயண முகவர் சேவை.
8.18 மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு வழங்குதல் (Passenger van-with A/C & without A/C, passenger bus, lorry, tractors with trailer, etc.
8.19 இயந்திரங்கள் வாடகைக்கு வழங்குதல். (JCB, excavator, compressor, pay loader, etc.)
8.20 தற்காப்பு உபகரணங்கள்
8.21 தீயணைப்பு கருவிகள்

**9. எந்திரவியல் சேவைகள்.**
9.1 பெயர்ப் பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள் செய்தலும்.
9.2 மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், திருத்துதல் மற்றும் மீளமுறுக்குதல் (Rewind) உட்பட
9.3 ஜெனரேட்டர்கள் திருத்துதல்.
9.4 குளிரூட்டி, வாகன குளிரூட்டி திருத்துதல்.
9.5 குடிசார் எந்திரவியல் வேலைகள், கட்டிடங்கள், வீதிகள், ஏனையநிர்மாணங்கள் நிர்மாணித்தலும் திருத்தவேலைகளும்.
9.6 மின்சார இணைப்புவேலைகள்.
9.7 நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் மற்றும் திருத்தவேலைகள்.
9.8 இரும்பு,அலுமினியம் எள்பவற்றிலான கட்டிடம் சார்ந்தபொருத்துக்கள் செய்தலும் பொருத்தலும்.
9.9 கட்டிடங்கள் / கட்டிடசேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய (இயந்திர சாதனங்களுக்கான) உசாத்துணைசேவைகள்.
9.10 மின்சார உசாத்துணை சேவைகள்.
9.11 நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல் / பொருத்துதல் / தச்சுவேலை.
9.12 எந்திரவியல்சார் வரைதலும் நீலப் பிரதிசெய்தலும்.
9.13 கறையான் / பீடைகள் ஒழிப்புவேலைகள்.
9.14 தொழிலாளர் வழங்கல் (திறன் சார், திறன் சாரா, மற்றும் காவலாளிகள்)
9.15 பராமரிப்பு வேலைக்கான கணியஅளவுச் சிட்டை (B.O.Q.) தயாரித்தல்

**10. மின்னணு பொருட்கள்.**
10.1 கணினி மற்றும் கணினி உபகரணங்கள் உட்பட மின்னியல் பொருட்கள்.
10.2 தகவல்தொழில்நுட்ப வன்பொருள் மென்பொருட்களிற்கான வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
10.3 தொடர்பாடல் சாதனங்களுக்கான உபகரணங்கள் வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
10.4 தொலைபேசி உபகரணங்களும் கையடக்கதொலைபேசிகளும் வழங்கல்.
10.5 கணனிவலைப்பின்னல் ஸ்தாபித்தலும் அதற்கானஉபகரணங்களும்.

**பதிவு தொடர்பான நிபந்தனைகள்.**

1. வழங்குநர்களாக பதிவு செய்பவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்தல் வேண்டும். ஒவ்வொரு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'வழங்கல்கள் சேவைகளுக்கான பதிவுசெய்தல் 2022'** எனக் குறிப்பிட்டுபதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

* பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் வைப்பு சிட்டை பிரதி என்பவற்றினை **நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என முகவரியிடல் வேண்டும்.

2. ஒவ்வொருவழங்கல் / சேவைகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும். ஒவ்வொருவிண்ணப்பப் படிவத்துடனும் பதிவுக்கட்டணமாக ரூபா 2,000/ = இனை **கணக்கு இல. 162 - 1 - 001 - 6 - 0000880 மக்கள் வங்கி** யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், எனும் பெயரில் வைப்பிலிட்டு வைப்பு சீட் டின் பிரதியை இணைக்கவும்.

3. கம்பனி தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் தங்கள் வியாபார பதிவுபத்திரத்தில் குறிப்பிட்ட வியாபாரத்தின் பொது தன்மைக்கு ஏற்ற வழங்கல் / சேவைக்கு மட்டுமே பதிவினை மேற்கொள்ள முடியும். வியாபாரத்தின் பொது தன்மையுடன் தொடர்பற்ற வழங்கல்/சேவைக்கு பதிவினை மேற்கொள்ளும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப் படும்.

4. விலைமனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலைமனுக்கள் கோர பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.

5. கோரப்படும்போது விலைமனுக்களை சமர்ப்பிக்கதவறும் அல்லது உரியநேரத்திற்கு பொருட்கள் / சேவைகளைவழங்க தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராதபொருட்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொருவழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

6. விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டிடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களையும் CIDA பதிவு இலக்கம் மற்றும் தரம் ஆகியவற்றையும் குறிப்பிடுக. (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 9.5, 9.6, 9.7, 9.8, 9.9, 9.10 மற்றும் 9.16 இற்குமட்டும்)

7. சேவைகளை / வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவுசெய்யும் பெயரிலேயே வழங்கப்படும். அத்துடன் வழங்குநர்கள் தங்கள் வியாபார பெயரிலேயே வங்கி கணக்கினை வைத்திருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு உதவி நிதியாளர் (வழங்கல்) உடன் தொடர்புகொள்ளவும்.
தொ.பே.இல. 0212226519.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## 14 பேரைக் காவு கொண்ட பஸ்; சாரதி மாரடைப்பால் திடீர் சாவு

பசறை - லுணகல வீதியின் 13 ஆவது மைல் பகுதியில் கடந்த மார்ச் மாதம் விபத்துக்கு இலக்காகிய பஸ்;சாரதி உயிரிழந்துள்ளார்.

திடீரென ஏற்பட்டுள்ள மாரடைப்பு காரணமாகவே குறித்த நபர் உயிரிழந்துள்ளார் எனத் தெரியவருகிறது.

திடீர் சுகவீனத்துக்கு இலக்காகிய அவர் புத்தல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக வெல்லவாய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட சந்தர்ப்பத்தில் உயிரிழந்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் கொவிட் தொடர்பான பரிசோதனைக்குப் பின்னர் இறுதிச் சடங்குகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 14 பேர் உயிரிழந்தனர். சம்பவத்தில் 14 பேர் உயிரிழந்த நிலையில், பலர் காயமடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தெதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் நான்கு வான்கதவுகள் திறப்பு

நாட்டில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக தெதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் நான்கு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன எனப் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

தெதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் நீரின் அளவு அதிகரித்துள்ளமையால் இவ்வாறு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நான்கு வான் கதவுகளும் இரண்டு அடி வரை திறக்கப்பட்டுள்ளதுடன், செக்கனுக்கு 5 ஆயிரத்து 600 கன அடி வேகத்தில் நீர் வெளியேற்றப்படுவதாகவும் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய கடமை நேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவ்வாறு, தெதுறு ஓயா வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால், தெதுறு ஓயா நீர்த்தேக்கத்துக்கு அண்டிய தாழ் நிலப் பிரதேசங்களில் வசிக்கும் பொது மக்களை அவதானமாக இருக்குமாறும் அந்த அதிகாரி கூறினார்.

மேலும், தொடர்ச்சியாக மழை பெய்தால் தெதுறு ஓயாவின் மேலதிக வான் கதவுகளும் திறக்கப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாகத் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக பல பிரதேசங்கள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள 16 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பல பகுதிகள் வெள்ளத்தால் மூழ்கியுள்ள போதிலும், இதுவரை எவரும் இடம்பெயரவில்லை என புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமைநேர அதிகாரி மேலும் கூறினார்.


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
வழங்குனர்கள் மற்றும் சேவையாளர்களை பதிவுசெய்தல் - 2022

01. தனிப்பட்டதகவல்கள்
1.1 முழுப்பெயர் :........................................................................................
1.2 தே.அ.அ. இல :........................................................................................
(தேசியஅடையாளஅட்டையில் உள்ளபடி)
1.3 விலாசம்:........................................................................................
........................................................................................
1.4 நிரந்தரதொலைபேசி இல:........................கைத் தொலைபேசி இல:........................
தொலைநகல்:........................................

02. வியாபாரதகவல்கள்
2.1 முயற்சியாண்மை நிறுவனத்தின் பெயர்:........................................................................
2.2 வியாபார பதிவு இல:........................................................................................
(வியாபார பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும்)
2.3 பெறுமதிசேர் வரி (VAT) இல:........................................................................................
(VAT இல காணப்படின், பெறுமதிசேர் வரி (VAT) பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும்',
CIDA பதிவு இலக்கம்............ தரம்................. காலாவதி திகதி..............
2.4 விலாசம்:........................................................................................
........................................................................................
2.5 நிரந்தர தொலைபேசி இல:........................கைத்தொலைபேசி இல:..............................
தொலைநகல் :........................................
(குறைந்த பட்சம் இரண்டு தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடவும்)
2.6 மின்னஞ்சல் முகவரி:........................................................................................
2.7 மாவட்டம்:........................................................................................
2.8 பிரதேசசெயலர் பிரிவு:........................................................................................

03. மேலதிகவிபரங்கள்
3.1 வங்கியாளரின் பெயர் :........................................................................................
3.2 கிடைக்கக்கூடிய கடன் வசதிகள் :........................................................................
3.3 ICTADபதிவு இல :........................................................................................
(எந்திரவியல் சேவை 9.5 9.9 இற்குமட்டும்.) ICTADபதிவு இல்லாதுவிடின் ரூபா 200,000.00 (இருநூறுஆயிரம் மட்டும்) க்குஉட்பட்ட வேலைகளுக்கு கூறுவிலை சமர்ப்பிக்கமட்டுமே தகுதியுடையவராவார்.

04. வழங்கல் சேவைகளுக்கானவிபரங்கள்.

| தொடர் இல | சேவைகள் /வழங்கல்கள் |
|---|---|
| | |
| | |
| | |

05. வழங்கப்படும் பொருட்கள் பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவேண்டும்

நான்/நாங்கள் மேற்படி பதிவு நிபந்தனைகளுக்கு இணங்குகின்றேன்/ இணங்குகின்றோம்.

கையொப்பம் :..................................
பெயர் :.................................. திகதி :........................................


## பிரத்தியேக வகுப்புக்களுக்கு நிபந்தனைகளுடன் அனுமதி

நாடளாவிய ரீதியில் க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி முதல் 50 சதவீத மாணவர் கொள்ளளவுடன் பிரத்தியேக வகுப்புக்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று பரவல் காரணமாக கடந்த ஏப்ரல் மாத இறுதியில் பிரத்தியேக வகுப்புக்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

## மண் சரிந்து விழுந்ததில் ஒருவர் பரிதாப மரணம்

பதுளை, எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹல்பே தோட்டம் பகுதியில், வீதியின் மீது மண்சரிந்து விழுந்ததில், வீதியில் பயணித்த 29 வயது நபர் மரணமடைந்தார்.

திவுல்கஸ்தென்ன, ஹேலஹல்பே பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயது நபரே இவ்வாறு மரணமடைந்தார்.

சடலம், வீதியிலிருந்து சுமார் 300 மீற்றர் தொலைவிலுள்ள நீர்நிலையிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைக்காக பதுளை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

## சித்திரவதையில் ஈடுபட்ட அதிகாரிகள் குறித்து அறிக்கை கோரப்பட்டுள்ளது

பயங்கரவாத சட்டத்தின் கீழ் இரண்டு வருடங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள முஸ்லிம் சட்டத்தரணி ஒருவருக்கு எதிராக சாட்சியமளிக்குமாறு, சித்திரவதைக்கு உட்படுத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவை குற்றவாளியாக்குவதற்காக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூவர், சித்திரவதை செய்தனர் எனக்காவலில் உள்ள சேவ்தி போல்ஸின், மொஹமட் சுல்தான் கோட்டை நீதிவானிடம் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் தன்னை சித்திரவதை செய்த மூன்று பேரின் பெயர்களை கோட்டை நீதிவான் பிரியந்த பெர்னாண்டோவிடம் தெரிவித்துள்ளார்.

பதினெட்டு மாதங்களுக்கு முன்னர், ஒரு மத்ரஸாவில் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டமைக்காக மொஹமட் சுல்தான் கைது செய்யப்பட்டார்.

சித்திரவதை காரணமாக தனக்கு இன்னும் முதுகுத்தண்டு குறைபாடு இருப்பதாக அவர் கூறியமையையடுத்து, அவரை சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்பத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக, சட்டத்தரணி ஹிஸ்புல்லாவை குற்றவாளியாக்கும் நோக்கில், சித்திரவதை செய்யப்பட்டதாக, அல் சுஹாரியா அரபுக் கல்லூரியின் இரண்டு ஆசிரியர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

மொஹமட் சுல்தானை பிணையில் விடுவிப்பதற்கு, பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரால் மறுப்பு வெளியிடப்பட்ட நிலையில், நவம்பர் 10 ஆம் திகதி வரை மொஹமட் சுல்தான் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதோடு அன்றையதினத்தில், வைத்திய மற்றும் பொலிஸ் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லா என்ற சட்டத்தரணி, உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய தற்கொலை குண்டுதாரியுடன் தொடர்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில், ஏப்ரல் 2020 இல் குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் கைது செய்யப்பட்டதோடு, மேலும் அவர் மத்ரஸா பாடசாலையில் விரிவுரை நடத்தினார் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



**- செல்லத்துரை ரவீந்திரன் -**

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அங்கம் - 178**

# இனப்படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**449. டப்ளின், பிறீமன் நகரங்களில் விசாரணை செய்த தீர்ப்பாயங்களின் நடுவர்களின் பின்னணிகள் பற்றி ஏன் விவரமாக குறிப்பிடுகிறீர்கள்?**

தமிழ் மக்கள் தங்கள் பெயரில் தங்களுக்காகவென்று நடத்தப்படும் அரசியலையும், அரசியல் தலைவர்களையும் புரிந்து கொள்வதற்காகத்தான். இந்த நடுவர்களின் துறைகளில் அவர்களுக்கு இருந்த பாண்டித்தியம், அனுபவம், அறிவு, முதிர்ச்சி, மதிப்பு இவற்றை மக்கள் அறிந்து கொள்வதால் அப்படியானவர்கள் விசாரித்துத் தரும் தீர்ப்பு, அபிப்பிராயங்கள் எவ்வளவு நம்பகத்தன்மை கொண்டவையாகவும், சர்வதேச ரீதியில் மதிப்புதன்மை கொண்டவையாகவும் இருக்கும் என்பதை அறிந்து கொள்வதற்காகவே குறிப்பிட்டேன். அவர்கள் தரும் அறிவுரைகளும் அதே தரத்தில் இருக்குமாதலால், தமிழ் மக்களும் அவற்றைக் கணக்கெடுத்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை கோடி காட்டுவதே எண்ணம். அதேசமயம் இவ்வளவு தரம் வாய்ந்த ஒரு தீர்ப்பாயம் இனப்படுகொலை எனவும் ஆராய்ந்து சர்வதேச ரீதியில் மதிப்பு வாய்ந்த தீர்ப்பையும் அபிப்பிராயங்களையும் தெரிவித்திருந்த போதிலும், தமிழ் மக்களின் தலைவர்கள் இவற்றை அரசியலாக்கிக் கொண்டிருந்தார்கள். அவற்றையும் மக்கள் உணர வேண்டும் என்பதாலும் அந்த பின்னணிகள் விவரிக்கப்பட்டன.

**450. எந்த அரசியலை குறிப்பிடுகிறீர்கள்?**

மார்ச், ஒக்ரோபர் 2021 காலப்பகுதிகளில் ஸ்ரீலங்கா விவகாரம் சர்வதேச மனித உரிமை மன்றில் விவாதத்திற்கு வந்த போது, இவை இனப்படுகொலை என்பதிலும் பார்க்க அவை அங்கிருந்து வெளியே எடுக்கப்பட்டு ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு பாரப்படுத்தப்படவேண்டும் என்ற கோஷங்கள் வலுவெடுத்தன.



ஸ்கொட்லாண்ட் புறப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இவை இனப்படுகொலையா, இனவழிப்பா, இனச் சுத்திகரிப்பா என்ற வாதங்கள் கூட சூடு பிடித்திருந்தன.

கூட்டமைப்பின் சுமந்திரன், இனப்படுகொலை என ஐ.நா. முன்கொண்டு செல்ல சாட்சியங்கள் குறைவாகவே உள்ளன என்றும் வழக்கென்ற அடிப்படையில் அதனை முன்னெடுக்க முக்கியமாக நோக்கம் (Intention) ஆதாரம் நிறுவப்படவேண்டும், அதை நிறுவுவதற்கான ஆதாரம் நிறைந்தளவில் இல்லை, இருந்தாலும் அவை விரிவாக ஆராயப்படவில்லை என்று கருத்துக்கள் தெரிவித்திருந்தார். அவர் பிரபலமான சட்டத்தரணி.



டப்ளின் அமர்வின் நடுவர்கள்



அதற்கு எதிர்மறையாக சிவாஜிலிங்கமோ இது சுமந்திரனின் தந்திரம், அடிவருடிதனம் என்று சாடி, போதியளவு ஆதாரங்கள் உண்டு எனவும், செப்டெம்பர் 2021க்கு முன் அவற்றைத் தருவேன் என்றும் சவால் விட்டார்.

அந்தக் கருத்துக்களும் சவால்களும் அந்த வருடத்து மனித உரிமை மன்றின் கூட்டங்கள் முடிந்த பின்னர் ஆடி ஓய்ந்து விட்டன. அரசியலும் வெவ்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தது. செப்டெம்பர் வந்தபொழுது பல கடிதங்கள் சென்ற சர்ச்சை அரசியலில் வியூகங்கள் பெற்றன.

அந்த அரசியல் நடத்தப்பட்டபொழுதே இந்த தீர்ப்பாயத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், சாட்சியங்கள் இருந்தன. அவர்கள் இனப்படுகொலையின் நோக்கங்கள் இருந்தனவா? அவை திருப்திப்படுத்தப்படும் அளவுக்கு இருந்தனவா என ஆராய்ந்திருந்தார்கள். அவர்களின் அறிவு, ஆற்றல், அனுபங்களிலிருந்து தமிழ்மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டது இனப்படுகொலையும்தான் எனத் தீர்ப்புத் தந்தார்கள். இவ்வளவு ஆதாரபூர்வமாக இருந்தும், அந்த படிகளில் இருந்து ஏறாமல், மாகாணசபை அமைந்தபோது அதனூடாக இனப்படுகொலைத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு, அது சர்வதேசத்திற்கு அறியப்படுத்தப்படவேண்டும் என்ற முயற்சி அரசியலுக்காகச் செய்யப்பட்டது. அதனையும் சுமந்திரன் அப்படியான தீர்மானம் இனப்படுகொலை என்று காத்திரத்தில் இல்லை என்று விக்னேஸ்வரனோடு இருந்த மாற்று அரசியலுக்காக வாதங்கள் தொடர்ந்து நடத்தினார். சாட்சியங்கள் சரித்திரமாகவே சொல்லப்பட்டன என்றும் கருத்துக்களும் பரப்பப்பட்டன.



சுமந்திரன்

**451. அந்த அரசியல் தொடர்கிறதா?**

அது தொடர்கிறது. அதன் வெளிப்பாடே தற்பொழுது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள சமர்ப்பணம்.

அங்கு செல்வதற்கு வழியில்லை என சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு எதிரடி என்று இது பதியப்பட்டுள்ளது. ஆனால் இந்த சமர்ப்பணம் இனப் படுகொலை என்ற அடிப்படையில் அல்ல. அது போர்க் குற்றங்கள், தமிழ்மக்களுக்கு மாறான செய்கைகள் என்ற ஆதாரங்களிலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அதாவது தமிழ் மக்களின் புலம்பெயர் குழுமத்தின் ஒரு பகுதி தாங்கள் இங்கு வெற்றிக் கொடி நாட்டியிருக்கிறோம் என்று மார் தட்டியுள்ளார்கள். வெற்றிக்கொடியானாலும் சுதந்திரக் கொடியானாலும் அது பட்டொளி வீசிப் பறப்பது கம்பத்தின் உயரத்தளவில் மட்டுமே. அந்த உயரம் எதுவென கூட்டமைப்பினது, சுமந்திரனினது, நாடு கடந்த அரசினது, இயலாத்தனத்துக்கு சவாலாக இது செய்யப்பட்டு இருப்பதாக முரசறையப்படுகிறது.

நாள்கள் செல்லப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். வழக்குப் பதியப்பட்டும் நடத்தப்பட்ட காணொலி பிரச்சாரத்தின் இடையிலும் ஜனாதிபதி கோட்டாபய ஸ்கொட்லாண்ட் சென்றிருக்கிறார். இவை தங்களை ஒன்றும் செய்யப்போவதில்லை என்ற கம்பீரத்தில் பேச்சுக்கள் தருகிறார்.

(வளரும்...)



சிவாஜிலிங்கம்

காலைக்கதிர்
Kalaikkathir

# மாகாண அதிகாரங்களை ஒருபுறம் வைத்துவிட்டு சுகாதாரத்தில் மக்கள் நலனை நோக்கவேண்டும்!

## வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் சி.ஹறிகரன் தெரிவிப்பு



எமக்கு மாகாணங்களுக்கான அதிகாரங்கள் நிச்சயம் பகிரப்பட வேண்டும். ஆனால், சுகாதாரத்துறையைப் பொறுத்தமட்டில் – மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு – அதிகாரங்கள் கிடைக்கும் கிடைக்கும் என்று காலத்தைக் கழிக்காது, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை தனியான ஒரு போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்தவேண்டும் என்று தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமாகிய லயன் சி.ஹறிகரன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு பயிற்சி வைத்தியர்கள் 8 பேர் கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்கும் வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது. அந்த நிகழ்வில் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தில் தொடர்ந்து 10 வருடமாக நான் செயலாளராகக் கடமையாற்றுகின்றேன். வைத்தியசாலையின் ஒவ்வொரு வளர்ச்சிப் படிநிலைகள் பற்றியும் எனக்கு நன்கு தெரியும். பல வைத்திய அத்தியட்சகர்கள் காலத்தில் அவர்களோடு இணைந்து அபிவிருத்திச் செயற்பாடுகளில் பங்கெடுத்துள்ளேன். இன்று 8 பயிற்சி வைத்திய உத்தியோகத்தர்கள் வருகைதந்துள்ளார்கள். இது எமது ஒரு நீண்ட நெடிய முயற்சியின் பயனாகக் கிடைத்த வெற்றி. வடக்கு மாகாண அரசுக்கு உட்பட்ட வைத்தியசாலைகளுக்கு முதல்தடவையாக எமது வைத்தியசாலைக்கே இந்த பயிற்சி வைத்தியர்கள் எமது வைத்திய அத்தியட்சகர், வைத்திய நிபுணர்களின் முயற்சியால் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கடும் முயற்சியின் பயனாகக் கிடைத்துள்ளார்கள்.

இதற்காக எமது வைத்தியசாலை குழந்தை வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி ஜெயபாலன், அரச மருத்துவ அதிகாரிகள் சங்க பிரதிநிதி வைத்தியர் சுஜந்தன், வடமாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர் வைத்தியர் காண்டீபன், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர் வைத்தியர் பாதீனிய ஆகியோருக்கும் இந்த இடத்தில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

சுகாதாரத் துறையை நாம் மற்றத் துறைகளுடன் ஒப்பிடமுடியாது. எமது வைத்தியசாலையில் உளநலம், புற்றுநோய் என்று இரு சிறப்புப் பிரிவுகள் உள்ளன. வைத்தியசாலையின் தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றன.

புற்றுநோய் சிகிச்சைப் பிரிவும் இருப்பதால் அதனுடைய மருந்துவகைகள் அதிகவிலையுடையவை என்பதால் அதிகாரிகள் எமது வைத்தியசாலையை 'வெள்ளை யானை' என்பார்கள். அது உண்மைதான். நானும் ஓர் அரசியல்வாதிதான். எமது அதிகாரங்களை ஒருபுறம் வைத்துவிட்டு, மக்கள் நலனுக்காக ஒவ்வொரு தேவைகள் தொடர்பில் தொடர்ந்தும் குறைப்பட்டுக்கொண்டிருக்காமல் சகலவற்றையும் நிறைவுசெய்கின்ற வகையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்தவேண்டும். அதனால், யாழ். போதனா வைத்தியசாலை எதிர்கொள்கின்ற நெருக்கடி குறையும். மக்களின் வைத்திய சேவை விரிவுபடுத்தப்படும். நாம் எமது நலன்புரிச் சங்கம் ஊடாக வைத்தியசாலையை சூழ பல ஏக்கர் காணியை விலைக்கு வாங்கி வைத்தியசாலை தேவைக்காக சுவீகரிப்புக்கு வழங்கியுள்ளோம். போதிய பௌதீக வளங்கள் எமது வைத்தியசாலையில் உள்ளன. இதனால், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடமும் வளர்ச்சியுறும். – என்றார்.

# யாழ்ப்பாண மாவட்டம் முதல் காலி வரை இலங்கை என்னை தன்வசப்படுத்தியது!

## அமெரிக்கத் தூதுவர் புகழாரம்



யாழ்ப்பாணத்தின் சுவையான கடல் உணவுகள் முதல் சிகிரியாவின் சுவர் ஓவியங்கள் , நுவரெலியாவின் தேயிலைத் தோட்டங்கள் மற்றும் காலி கடற்கரை வரை இலங்கை என்னை தன்வசப்படுத்தியுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி.டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் வெளியிட்டுள்ள பிரியாவிடை செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

உண்மையில் இலங்கை ஓர் அற்புதமான நாடாகும். இங்கு தூதுவராகப் பணியாற்றியமை எனக்கு கிடைத்த கௌரவமாகும். குறிப்பாக பரந்த புன்னகை மற்றும் அன்பாக வரவேற்கும் மக்கள், என் முற்றத்தில் உள்ள அழகிய நீல நிற மாக்பீஸ் பறவைகள் முதல் கொத்து ரொட்டியின் வாசனை வரை பல விடயங்களை நான் இழக்கப் போகிறேன்.

வர்த்தகத்திலும், அரசாங்கத்திலும், சிவில் சமூகத்திலும் மற்றும் எமது அன்றாட வாழ்விலும் காணப்படும் மக்களுக்கும் – மக்களுக்கும் இடையிலான பிணைப்புக்களே எமது உறவைத் தாங்கி நிற்கின்றன.

எம் அனைவர் மீதும் மிகப் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்திய உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் கொவிட்-19 உள்ளிட்ட கடந்த சில ஆண்டுகளின் மிகவும் கடினமான சில தருணங்களை கடந்து செல்லவும் அவை எமக்கு உதவின.

அமெரிக்கா மற்றும் இலங்கை மக்களுக்கிடையே பொதுவான விடயங்கள் அதிகம் உள்ளன. 70 ஆண்டு கால பொதுவான வரலாற்றைக் கொண்டுள்ள ஜனநாயக நாடுகளாக சட்டத்தின் ஆட்சி , அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சி மற்றும் கருத்து சுதந்திரம் போன்ற அத்தியாவசியக் கொள்கைகளை மேம்படுத்தவும் , பாதுகாக்கவும் முயற்சி செய்கின்றோம்.

இலங்கையின் செழிப்பு மற்றும் இறையாண்மையை மேம்படுத்துவதற்கும், தனியார் துறை மற்றும் எமது மக்களுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கத்துடன் நெருக்கமான பங்காண்மையுடன் அமெரிக்கா செயற்பட்டுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் இலங்கைக்கு மொத்தம் ஒரு பில்லியன் டொலருக்கும் அதிகமான உதவிகளை அமெரிக்கா வழங்கியுள்ளதுடன், ஒத்துழைப்பிற்கான புதிய விடய பரப்புக்களையும் நாம் தொடர்ந்து இணங்காண்கின்றோம்.

கொவிட்-19 பெருந்தொற்றின் போதான சவாலான காலங்களில் நாம் தாராளமான பங்குதாரராக இருந்தோம்.

இலங்கை மக்களுக்கு எவ்வித செலவுகளும் இல்லாமல் நன்கொடையாக வழங்கப்பட்ட 24 லட்சத்துக்கும் அதிகமான தடுப்பூசிகளுக்கு மேலதிகமாக , கொவிட் தொற்றுக்கு எதிரான போராட்டத்திற்கு உதவுவதற்காக அமெரிக்கா இலங்கைக்கு சுமார் 1.8 கோடி டொலர்களை வழங்கியுள்ளது.

இந்த பொதுவான இலக்குகள் மற்றும் முதலீடுகள் அனைத்துக்கும் சில சமயங்களின் நாம் உடன்படுவதில்லை. எனினும் தொடர்ந்து பேசுவதும் , எத்தகைய சவால்களுக்கு மத்தியிலும் ஒன்றாக செயற்படுவதும் இராஜதந்திர சாராம்சமாகும்.

இருதரப்பு உறவை ஒரு நல்ல பயணப்பாதையில் வைத்திருப்பதற்கு எமக்கு அந்த திறந்த தொடர்பாடல் மற்றும் உடன்பாடு இல்லாத பரப்புக்களில் பணியாற்றும் திறன் என்பன அவசியமாகும்.

எமது இரு ஜனநாயக நாடுகளின் பங்காண்மையை மிக நீண்ட எதிர்காலத்துக்கு விரிவுபடுத்துவோம். அதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

இத்தீவின் இயற்கை அழகு, கலாசாரம் , உணவு மற்றும் நிச்சயமாக அதன் மக்களாகிய உங்களுடனான எனது அனுபவங்களை நான் குறிப்பிடவில்லை எனின் , இலங்கையில் எனது பதவிக் காலம் முழுமையடையாது.

யாழ்ப்பாணத்தின் சுவையான கடல் உணவுகள் முதல் சிகிரியாவின் சுவர் ஓவியங்கள் , நுவரெலியாவின் தேயிலை தோட்டங்கள் மற்றும் காலி கடற்கரை வரை இலங்கை என்னைத் தன்வசப்படுத்தியுள்ளது.

இலங்கை மக்களின் இதமான அன்பு மற்றும் தாராள மனப்பான்மை எப்போதும் என் நினைவிலிருக்கும். அதற்கு என்றும் நன்றியுடன் இருப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

# யாழ்.போதனா இரத்த வங்கியில் குருதி வகைகளுக்கு தட்டுப்பாடு!

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் அனைத்து வகை குருதிகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவ தாக இரத்த வங்கி அறிவித்துள்ளது.

எனவே குருதிகொடையாளர்கள் 0772105375 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாகத் தொடர்பு கொண்டு இரத்த தானம் செய்ய முன்வருமாறு இரத்த வங்கி கோரியுள்ளது .

அது தொடர்பில் இரத்த வங்கி மேலும் குறிப்பிட்டு உள்ளவை வருமாறு –

ஏற்கனவே இரத்ததானம் செய்து நான்கு மாதங்கள் பூர்த்தியானவர் மற்றும் புதிதாக இரத்ததானம் செய்யக் கூடியவர்கள் உங்களுக்கு அருகிலுள்ள இரத்த வங்கிக்குச் சென்று இரத்ததானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம். கொரோனாத் தடுப்பூசி போட்டிருந்தால், போட்ட தினத்திலிருந்து ஒரு கிழமையின் பின்பு இரத்த தானம் செய்யலாம். கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தால் அது சுகமடைந்து தொற்று இல்லையென உறுதிப்படுத்திய தினத்திலிருந்து ஒரு மாதத்தின் பின்பு நீங்கள் இரத்ததானம் செய்யலாம்.

சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இரத்ததான முகாம்களையும் நடாத்தலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பைஸர், அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகளுக்கு கட்டுப்படாத 'ஏ.30' கொரோனா பிறழ்வு!

## மக்களை எச்சரிக்கிறார் சன்ன ஜயசுமன

பைஸர், அஸ்ட்ராஜெனெகா உள்ளிட்ட தடுப்பூசிகளுக்கும் கட்டுப்படாத 'ஏ.30' என்ற புதிய வைரஸ் பிறழ்வு சில நாடுகளில் இனங்காணப்பட்டுள்ளனஎனவும் குறித்த பிறழ்வு இலங்கையில் நுழையாதிருப்பது தொடர்பில் தீவிர அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். குறித்த வைரஸ் பிறழ்வு தொடர்பில் இராஜாங்க அமைச்சர் மேலும் தெளிவுபடுத்துகையில் –

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்த வைரஸ் பிறழ்வு உலக நாடுகள் சிலவற்றில் இனங்காணப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இந்த பிறழ்வு பைஸர், அஸ்ட்ரா ஜெனெகா உள்ளிட்ட முன்னிலை தடுப்பூசிகளுக்கும் கட்டுப்படாது என்பது புதிய கண்டுபிடிப்பாகும்.

இந்த தடுப்பூசிகளால் கிடைக்கப்பெற்றுள்ள பாதுகாப்பு இந்தப்பிறழ்வின்மூலம் முழுமையாக இல்லாமலாக்கப்படலாம் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா என்பன விசேட அவதானம் செலுத்தியுள்ளன. காரணம் அந்நாடுகளில் நிலவும் குளிர் காலநிலையில் இந்த பிறழ்வு பரவத்தொடங்குமாயின் பாரிய நெருக்கடிகளை அந்நாடுகள் எதிர்கொள்ள நேரிடும்.

எவ்வாறிருப்பினும் இது தொடர்பில் நாமும் அவதானத்துடன் இருக்கின்றோம். கொவிட் முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது என்று எண்ணி, கொவிட்டுக்கு முன்னரான வாழ்க்கைக்கு செல்வோமாயின் எதிர்வரும் 4 வாரங்களின் பின்னர் அதன் பிரதிபலனை எம்மால் அனுபவிக்க நேரிடும். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் மறைமுகப் பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றன

## தயாசிறி ஜயசேகர சாடல்

இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் நாட்டுக்குள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை மறைமுகமாக தோற்றுவித்து வருகின்றன. இந்த நாடுகளுக்கு எதிரான சக்தியை நாட்டுக்குள் ஒருபோதும் தோற்றுவிக்கமாட்டோம்.

இலங்கை சுயமான முன்னேற்றமடைவதற்கு பலம் வாய்ந்த நாடுகள் இடமளிக்க வேண்டும். அமெரிக்கா இலங்கையில் ஆதிக்கம் கொண்டால் இலங்கையின் எதிர்காலம் லிபியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு ஒப்பானதாக அமையும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

யுகதனவி மின்நிலைய பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்துக்கு அரசாங்கத்தின் 11 பிரதான பங்காளி கட்சியினர் ஒன்றிணைந்து கொழும்பில் 'மக்கள் பேரவை' மாநாட்டை நடத்தினர்.

அந்நிகழ்வில் உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்காவின் நியூபோர்ட் நிறுவனத்துக்கு வழங்க கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம் ஒரு பாரதூரமான பிரச்சினையாகக்காணப்பட்டாலும்,அதனை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தில் பல பிரச்சினைகள் தோற்றம்பெற்றுள்ளன.

கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து துறைமுகம், மின்சாரத்துறை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகிய பிரதான துறைகளின் தொழிற்சங்கத்தினர் எதிர்வரும் வாரம் முதல் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளமை பல்வேறு மட்டத்தில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

தொழிற்சங்கத்தினருடன் பலமுறை பேச்சுகளில் ஈடுபட்டுள்ளோம். தொழிற்சங்கத்தினரது கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

ஐந்துவருட ஆட்சிக்காலத்தில் இருக்கும் அரசாங்கத்துக்கு முழு நாட்டையும் காட்டிக்கொடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபடும் அதிகாரம் கிடையாது. இதுவே தற்போதைய பிரதான பிரச்சினையாகும். தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் திட்டங்களை முற்பட்ட அரசாங்கங்களும் முன்னெடுக்கவில்லை. தற்போதைய அரசாங்கமும் முன்னெடுக்கவில்லை. எதிர்காலத்திலும் இந்நிலைமை தொடரக் கூடாது என்பதற்காகவே போராடுகிறோம்.

இலங்கையில் இராணுவச் செயற்பாடுகளில் ஈடுபட அமெரிக்கா முயற்சிக்கிறது. இந்தியா,சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் நாட்டுக்குள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை மறைமுகமாகத் தோற்றுவித்து வருகின்றன.

பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அரசாங்கத்தை வீழ்த்தி தமக்கு தேவையான அரசாங்கத்தை உருவாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

யுகதனவி மின்நிலைய ஒப்பந்தம் முறையற்ற வகையில் அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இயற்கை எரிவாயு விநியோகத்தை தேசிய மட்டத்தில் முன்னெடுக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்ட வேளையில் முறையற்ற வகையில் அமெரிக்க நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

முறையற்ற செயற்பாடுகளுக்கு இடமளித்தால் இலங்கையின் எதிர்காலம் லிபியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு ஒப்பானதாக அமையும். இந்தியாவிற்கும்,சீனாவிற்கும் எதிரான சக்தியை இலங்கைக்குள் தோற்றுவிக்கமாட்டோம். சுயாதீனமான முறையில் முன்னேற்றமடையும் முயற்சிகளை இந்தியா,சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் தடுக்கக் கூடாது.

யுகதனவி மின்நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்க கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தின் உள்ளடக்கம் இதுவரையில் பகிரங்கப்படுத்தப்படவில்லை. மூல வரைவுடன் மேலும் இரு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.அதற்கு இடமளிக்க முடியாது.

துறைமுகத்தின் நிலைமையும் பாரதூரமானது.கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்யும் பணிகள் முன்னெடுக்கப்படவில்லை. இருப்பினும் மறுபுறம் துறைமுகத்தின் 13 ஏக்கர் நிலப்பரப்பு காணி சீன நிறுவனத்துக்கு வழங்கப்படவுள்ளது.

நாட்டின் பொருளாதார கேந்திர மையங்களை பிற நாட்டவர்களுக்கு வழங்கும் போது அது ஏதாவதொரு வழியில் பாதிப்பை ஏற்படுத்தும். – என்றார்.

# விவசாயத்துறை தொடர்பிலும் வைத்தியர்களே ஆலோசனை!

## முன்னாள் அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு



இலங்கையில் விவசாயத்துறை தொடர்பில் வைத்தியர்களின் ஆலோசனைக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகிறது என முன்னாள் அமைச்சர் பீ. ஹரிசன் கருத்து வெளியிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற அவர் –

அரிசியை இறக்குமதி செய்யப்போவதில்லை என்றார்கள்.

இறக்குமதி செய்யப்பட்டால், தாம் பதவி விலகிவிடுவோம் எனத் தெரிவித்தார்கள்.

எனினும் பின்னர் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. இரசாயனப் பசளைகளை இறக்குமதி செய்யப்போவதில்லை என்று விவசாய அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் தற்போது தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பயிர்செய்கைக்காக தமது முன்வைத்த காலை பின்வைப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இங்கு விவசாயத்துறை அமைச்சரின் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மாறாக, விவசாயத்துறையைப் பற்றி எதுவுமே தெரியாத வைத்தியர்களே விவசாயத்துறை தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்குகின்றனர்.

எனவே விவசாய அமைச்சரின் தீர்மானங்களுக்கு எவ்விதப் பயன்களும் இல்லை என்றும் ஹரிசன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை விவசாயத்துறைக்கு ஆலோசனை வழங்கும் இந்த வைத்தியர்களே முன்னர் சுகாதாரத்துறையிலும் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்த முனைந்தனர் எனவும் ஹரிசன் குற்றம் சுமத்தினார்.

# இளமையான வாக்காளர்களை தேர்தலில் ஈடுபடுத்தத் திட்டம்

வாக்காளர் பதிவு சட்டமூலம் நடைமுறைக்கு வருவதால், 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் வாக்களிக்க முடியும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இளைஞர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் நோக்கங்களில் ஒன்றாக இருந்ததுடன் அதற்கேற்ப இளைஞர்களுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்–

1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர் பதிவுச் சட்டத்துக்கு அமைய, முன்னர் ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் முதல் திகதியில் 18 வயதை பூர்த்தி செய்தவர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டதோடு, அதன் பின்னர் பிறந்த தினத்தைக் கொண்டவர்களுக்கு அதற்கு அடுத்த வருடம் மே 31ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெறும் தேர்தலிலேயே வாக்குரிமை கிடைத்தது.

இது தொடர்பில் பல்வேறு இளைஞர் அமைப்புக்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன எனவும், இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு விசேட கவனம் செலுத்தி 2021 பெப்ரவரி மாதம் இது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தைச் சமர்ப்பித்துள்ளது.

இதற்கமைய, இந்தச் சட்டமூலம், இந்தச் சூழலைக் கடந்து, அதிக இளைஞர்களுக்கு வாக்களிக்க வாய்ப்பளிக்கும் வகையில், இந்த சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, 2021 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க வாக்காளர் பதிவு சட்டம் ஒக்ரோபர் 13 திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இது தொடர்பில் இந்நாட்டு இளைஞர்களுக்கு அறிவிக்கப்படும் எனவும், மேலும் இளைஞர் ஒருவர் 18 வயதில் வாக்களராகப் பதிவு செய்துகொள்ள, அவரது கிராமத்தைச் சேர்ந்த கிராம சேவகர் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.வாக்காளர் பட்டியலைத் தவிர, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை துணைப் பட்டியல் தயாரிக்கப்படுவதாகவும், இளைஞர்களின் பெயர்களை முதலில் அதில் சேர்க்க முடியும்.

# கொடுங்கோல் ஆட்சியைத் தக்கவைக்க ஞானாசாரருக்கு உயர் கௌரவப் பதவி

## நளின் பண்டார குற்றச்சாட்டு

இனவாதம் மற்றும் மதவாதத்தைக் கக்கி, மக்களைப் பிளவுபடுத்தி ஆட்சியைப் பிடித்த இந்த அரசு, தற்போது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் அதே பாணியைக் கையாள்கின்றது. இதற்காகவே ஞானாசார தேரர் தலைமையில் ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு –

இனவாதம் பேசி, மதவாதத்தைக் கையில் எடுத்து, மக்களைப் பிளவுபடுத்தி, மோதல்களை ஏற்படுத்தியே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. தற்போது எல்லாவழிகளிலும் தோல்வி கண்டுள்ளது.

எனவே, ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக அன்று கையாண்ட யுக்திகளை கையாள ஜனாதிபதி முயற்சிக்கின்றார்.

ஞானாசார தேரர் உள்ளிட்டவர்கள் இந்த அரசைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்தனர். ஞானாசார தேரர் யார் என்பது அனைவருக்கும் தெரியும். ஊடகவியலாளர் எக்னெலிகொடவின் மனைவியை அச்சுறுத்தினார். நீதிமன்றத்தை அவமதித்தார்.

இனங்களை இலக்கு வைத்து பிரசாரம் முன்னெடுத்தார். இப்படியான ஒருவர் தலைமையில் ஒரே நாடு, ஒரே சட்டம் எனும் ஜனாதிபதி செயலணி ஏன் அமைக்கப்பட வேண்டும்? இதன் நோக்கம் தெளிவாகின்றது.

இனவாதம், மதவாதம் உள்ளிட்ட விடயங்களைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதேபோல் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துக்கு நீதி கோரிய அருட்தந்தையர்கள் தற்போது சி.ஐ.டிக்கு அழைக்கப்படுகின்றனர். இது நிறுத்தப்பட வேண்டும். – என்றார்.

# உணவுப் பொருள்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும்

பல அத்தியாவசிய உணவுப் பொருள்களை இலங்கைக்குக் கொண்டு வருவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிழங்கு, பருப்பு, சீனி, உட்பட அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு டொலர் இல்லை என அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் நாள்களில் நாட்டில் அத்தியாவசியப் இறக்குமதி பொருள்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தட்டுப்பாடு காரணமாக பொருள்களின் விலை அதிகரிக்கும் என அதன் ஊடக பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார். தற்போது வரையிலும் டொலர் தட்டுப்பாடு காரணமாக சீனியை ஏற்றி வந்த கொள்கலன் துறைமுகத்தில் சிக்கியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசிய உணவு பொருள்களுக்காக குறைந்தபட்சம் 10 – 11 கோடி டொலர் பணம் மாதாந்தம் செலவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




**ஜனனீ தேவானந்த்**
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom

மெய்நிகர் வகுப்பறைகள் அதிகரிக்கின்ற போது கணனி மற்றும் கைபேசிகளின் பாவனை அதிகரித்து வருவதை அவதானிக்கலாம். இன்று உலகம் முழுவதும் ஈ.கழிவுகள் அச்சுறுத்தும் வகையில் அதிகரித்து வருகின்றன. சீனப்பெரும் சுவரைவிட அதிகளவு நிறைகொண்ட இ.கழிவுகள் அச்சுறுத்த ஆரம்பித்திருக்கின்றன. இந்தச் சுழலில் கிறீன் கொம்புட்டிங் பற்றிய எண்ணக்கருக்களை நோக்குவது சிறந்ததாக அமையும். அதாவது உலகெங்கும் பச்சை அரசியல் முக்கியம் பெறுவதால் அதனை முக்கியமாகக் கருத வேண்டியுள்ளது.

தற்போது எமக்கு மழைக் காலம் ஆரம்பமாகி எங்கும் பச்சைப்பசேலென பயிர்கள் துளிர்விட ஆரம்பித்திருக்கின்றன. வயல் செய்வோர் பருவம் பார்த்து தங்கள் வயல்களை விதைத்துள்ளனர். அவை சிறிது வளர்ந்து எங்கும் பச்சையாகவே காட்சியளிக்கின்றன. பச்சை என்பது விரும்பத்தக்க ஒரு நிறமாகவும் பச்சை என்பது ஒரு பிரபலமான சொல்லாகவும் மாறிவிட்டது, பொதுவாக சுற்றுச்சுழல் பற்றிய பொறுப்புணர்வு மற்றும் சுழல், நட்பு, ஆரோக்கியம், பொருளாதார ரீதியாக செலவைக் குறைத்து ஆயுட்காலத்தை நீடிக்க செய்வது போன்ற விடயங்கள் சார்ந்து உலகம் தீவிரமாகச் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறது.

கணனிப்பாவனையிலும் Green Computing எனும் விடயம் பேசுபொருளாகியிருக்கிறது.

1992 ஆம் ஆண்டில், யு.எஸ். சுற்றுச்சுழல் பாதுகாப்பு நிறுவனம், மானிட்டர்கள், காலநிலை கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் பிற தொழில்நுட்பங்களில் ஆற்றல் திறனை மேம்படுத்துவதற்கும் அங்கீகரிப்பதற்கும் ஒரு லேபிளிங் திட்ட வடிவமைப்பான எனர்ஜி ஸ்டார் ஐ அறிமுகப்படுத்தியது. இத் திட்டத்திற்குப் பிறகு பசுமை கம்பியூட்டிங் (Green Computing) என்ற சொல் உருவாக்கப்பட்டது.

பசுமை கம்பியூட்டிங் என்பது சுற்றுச்சுழலுக்கு ஏற்றவாறு நிலைத்தன்மையுடைய கணினியைக் குறிக்கிறது. அதாவது இது பற்றிய ஆய்வானது கணினிகள், சேவையகங்கள் மற்றும் தொடர்புடைய துணை அமைப்புகளை வடிவமைத்தல், உற்பத்தி செய்தல், பயன்படுத்துதல், அப்புறப்படுத்துதல், போன்ற விடயங்கள் திறமையாகவும் சுற்றுச்சுழலில் குறைந்த அல்லது பாதிப்பை ஏற்படுத்தாதவாறும் செயல்படுவதற்கான முறைகளைக் கண்டுபிடித்தலாகும்.

இது கணினி வளங்களை திறமையாகப் பயன்படுத்துவதற்கான ஆய்வு மற்றும் நடைமுறையை உள்ளடக்கியுள்ளது. இது அபாயகரமான பொருள்களின் பயன்பாட்டைக் குறைக்கவும், பொருள்களின் ஆற்றல் செயல்திறனை அதிகரிக்கவும், மறுசுழற்சியை ஊக்குவிக்கவும், பொருளாதார நிலைத்தன்மையை அடையவும் முயற்சிக்கிறது. அத்தோடு சமூக மற்றும் நெறிமுறை பொறுப்புக்களை கடைப்பிடிப்பது செயலாற்றவும் வழிவகுக்கிறது.

பசுமை கம்பியூட்டிங்கிற்கான அணுகுமுறைகள் எவை என்பதை கீழே பார்க்கலாம்.

### 1. மெய்நிகராக்கம் Virtualization

மெய்நிகராக்கம் என்பது நிறுவனங்களின் வணிக



பயன்பாட்டை சுயாதீன ஹோஸ்டின் வன்பொருளால் நிர்வகிக்க அனுமதிக்கும் தொழில்நுட்பமாகும். இது சேவையகங்களின் (Server) எண்ணிக்கையைக் குறைக்கிறது.

### 2. சக்தி மேலாண்மை Power Management

ஒரு இயங்குதளத்தை அதன் வன்பொருளின் ஆற்றல் சேமிப்பு அம்சங்களைக் கட்டுப்படுத்த அனுமதிக்கிறது. மானிட்டர்கள் மற்றும் ஹார்ட் டிரைவ்கள் போன்ற கூறுகளை செயலற்ற காலங்களுக்குப் பிறகு தானாகவே அணைக்கவும் உதவி செய்கிறது.

### 3. பொருள் மறுசுழற்சி Material Recycling

காலாவதியான அமைப்புகளின் பாகங்கள் சில சில்லறை விற்பனை நிலையங்கள் அல்லது தனியார் மறுசுழற்சி மையங்கள் மூலம் மீட்கப்பட்டு மறுசுழற்சி செய்யப்படலாம். இவை மேலும் ஆற்றலைத்தரக் கூடிய பொருள்களாக மாற்றப்படலாம்.

### 4. தொலைத்தொடர்பு Tele community

தொழிலாளர்களின் தொடர்புகள், தொலைத்தொடர்வு வலையமைப்பினால் மேம்படுத்தப்படுகிறது. புல இக்கட்டான காலகட்டங்களிலும் இது சாத்தியப்படுகிறது. இதனால் அவர்களுக்கிடையே திருப்தி மேலோங்குகிறது. போக்குவரத்தின் பாவனைக் குறைப்பால் தீங்கான வாயு வெளியேற்றம் குறைவடைகிறது. இச் செயற்பாடு கொவிட் நோய்ப்பரவலின் பின்னர் முக்கியமான நன்மை தரும் ஒரு அணுகுமுறையாகக் காணப்படுகிறது. அலுவலக இடத்திற்கான செலவைக் குறைக்கிறது. வெப்ப வெளியேற்றத்தைக் குறைக்கிறது




**பசுமைக் கம்பியூட்டிங்கை செயல்படுத்துவதற்கான பல்வேறு செயற்பாடுகள் பற்றி சிந்திக்க வைக்கிறது. அதாவது**

பொதுவாக நாம் பல மென்பொருள்களை பதிவிறக்கம் செய்யாது ஒவ்வொரு தடவையும் இணைய இணைப்பினை ஏற்படுத்தி அதனை பயன்படுத்துகிறோம். இவ்வாறான பாவனையினால் நாம் அதற்காக பெருமளவு செலவு செய்கின்றோம். இதற்கு மாற்றாக மென்பொருள்களைப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தும் போது அதன் பாவனைக்கான தரவு சேமிக்கப்படுகிறது. இது போன்றே நாம் சக்தியைச் சேமிப்பதங்கு CRT களுக்குப் பதிலாக LCD களைப் பயன்படுத்தும் போது அவை அதிக ஆற்றல் திறன் கொண்டவையாகக் காணப்படுகிறது.

காகித பாவனைக்குப் பதிலாக நேர்நிலை தகவல் தொடர்பு அமைப்புகளை ஏற்படுத்துதல். power saver முறையினைப்பயன்படுத்துதல். எனர்ஜி ஸ்டார் லேபிளுடன் கூடிய பொருள் மென்பொருளைப் பயன்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் முன்மொழியப்படுகின்றன.

இணைய தேடு பொறியின் மூலமாக ஏற்படும் ஆற்றல் வீணடிப்பை தவிர்க்க Blackle எனும் இணைய தேடு பொறி அறிமுகமாகியுள்ளது. இது Google Programmable Search Engine மூலம் இயங்கும் இணைய தேடுபொறியாகும். பிளாக் ஹீப் மீடியா ஆஸ்திரேலியாவின் டோனி ஹீப் என்பவரால் உருவாக்கப்பட்டது, இது தேடல் முடிவுகளில் சாம்பல் - வெள்ளை உரை வண்ணத்துடன் கறுப்பு பின்னணியைக் காண்பிப்பதன் மூலம் ஆற்றலைச் சேமிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பசுமை கம்பியூட்டிங்ற்கான பலசெயற்திட்டங்கள் காணப்படுகின்றன. இலங்கையும் இதற்கான முதல்படியினை எடுத்துள்ளது. மின் - கழிவு மேலாண்மைக்கான இ - கழிவுகளை சேகரிக்கும் மையத்தை ஆரம்பித்துள் ளது. .


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2021
கொரோனா கற்றுத்தந்த பாடம்
'இயற்கையை நாம் அழித்தால்
இயற்கையால் நாம் அழிவோம்'
OXFORD
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகை மாதத்தில் காந்தளின் துளிர்ப்பைப் போல
நம்பிக்கையின் விதைப்பாக மரங்களை நாட்டுவோம்
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

காலைக்கதிர் Kalaikkathir

# ஞானசாரரின் நியமனத்துக்கு எதிராக நீதி அமைச்சர் சப்றியும் போர்க்கொடி!

## 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணி தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது எனவும் கைவிரிப்பு





பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்ற செயலணி அமைக்கப்பட்டமை தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்று நீதிஅமைச்சர் அலி சப்றி தெரிவித்தார்.

குறித்த செயலணியை உருவாக்குவது குறித்து தன்னுடன் கலந்தாலோசனை மேற்கொள்ளவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார் என்று கொழும்பு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்பதற்கான 13 பேர் கொண்ட செயலணியொன்று சில நாள்களுக்கு முன்னர் ஜனாதிபதியால் அமைக்கப்பட்டது.

அதன் தலைவராக ஞானசார தேரர் நியமிக்கப்பட்டமையுடன், அதன் ஏனைய உறுப்பினர்களில் நான்கு முஸ்லிம்களும் நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில், இந்தக் குழு குறித்து தான் மகிழ்ச்சியடையவில்லை என்று நீதி அமைச்சர் அலி சப்றி கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஆளுங்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அலி சப்றி இது தொடர்பில் அதிருப்தி தெரிவித்திருந்தார் எனவும் கூறப்படுகின்றது.



# அமைச்சர்கள் மூவரைப் பதவி நீக்க அவசர கலந்துரையாடல்

அமைச்சரவைக் கூட்டம், அமைச்சரவை தீர்மானத்தை பகிரங்கமாக விமர்சித்த அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கும் வகையில் அரசின் பின்வரிசை உறுப்பினர்கள் அவசர கலந்துரையாடல் ஒன்றை நடத்தி வருகின்றனர் என்று ஆளும் கட்சியை மேற்கோள்காட்டி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த செய்திக்குறிப்பில், அமைச்சரவை தீர்மானத்தை பகிரங்கமாக விமர்சித்த குற்றச்சாட்டின் பேரில் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை நீக்குவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய ஐரோப்பிய பயணத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வந்தவுடன் இதனை விளக்கமளிக்க, பின்வரிசை உறுப்பினர்கள் தயாராகி வருகின்றனர். அதற்கு முன்னதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது - என்றுள்ளது.

இதேவேளை, அரசை விமர்சிக்காமல் அமைச்சுப் பதவியைத் துறந்துவிட்டு, சமூகத்தில் எதனையும் கூற வேண்டும் என பின்வரிசை உறுப்பினர்கள் ஏற்கனவே பகிரங்கமாகத் தெரிவித்து வரும் நிலையில், கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு விற்பனை செய்தல் உட்பட எல்.என்.ஜி. கொடுக்கல் - வாங்கல்களுக்கு எதிராக 11 அரச கட்சிகளின் பங்குபற்றுதலுடன் கடந்த 29 ஆம் திகதி புறக்கோட்டையில் மக்கள் பேரவை கூட்டப்பட்டு அரசை மேற்படி மூன்று அமைச்சர்களும் கடுமையாக விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எனக்கு ஆலோசனை வழங்கவே ஞானசாரரைத் தெரிவு செய்தேன்

## நீதி அமைச்சராக சப்றியைத் தெரிவு செய்தபோதும் இவ்வாறு எதிர்ப்பு வந்தது எனக் கோட்டாபய பதிலடி



'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற கொள்கை வரைபை உருவாக்குவதற்கான ஜனாதிபதி செயலணியின் தலைமைப் பதவி பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு வழங்கப்பட்டமையானது தனக்கு ஆலோசனை வழங்குவதற்காகவே தவிர நாட்டுக்கு நீதியை வழங்குவதற்காக அல்ல என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் சந்திப்பில் வைத்து ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

தான் செய்யும் செயல்கள் அனைத்துக்கும் கட்சித் தலைவர்களிடம் ஆலோசனை பெறச் சென்றால், தனக்கு தேவையான நண்பர்களைத் தெரிவு செய்வதற்கும் அவர்களிமம் அனுமதி பெற வேண்டிய நிலை ஏற்படும் எனவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

நீதி அமைச்சராக அலி சப்றியை தெரிவு செய்த சந்தர்ப்பத்திலும் இவ்வாறு எதிர்ப்புகள் வந்தன எனவும் ஜனாதிபதி இதன்போது மேலும் தெரிவித்துள்ளார்.

# மேலும் 41 பேர் கைது!

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 521 ஆக உயர்வடைந்துள்ளது.

# குடாநாட்டில் வெள்ளப் பாதிப்புகளை நேரில் பார்வையிட்ட மாவட்ட செயலர்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் நேரடியாக நேற்று பார்வையிட்டார்.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தின் காரணமாக மழையுடனான காலநிலை நீடித்துவரும் நிலையிலேயே பல பகுதிகள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கல்லுண்டாய், நாவாந்துறை, அச்சுவேலி போன்ற பகுதிகளுக்கு விஜயம் செய்த மாவட்ட செயலர் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டமையுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.

## வடக்கில் இன்று தொடக்கம் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மூன்றாவது அலகாக பைஸர் தடுப்பூசி வழங்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் உள்ள போதனா மருத்துவனை, மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் ஆதார மருத்துவமனைகளில் இந்தத் தடுப்பூசி வழங்கும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், துணை மருத்துவ சேவையாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட சுகாதாரத்துறையில் பணியாற்றுபவர்களுக்கு முதல் கட்டமாக மூன்றாது அலகு கொரோனாத் தடுப்பூசி மருந்து வழங்கப்படவுள்ளது.

அடுத்த கட்டமாக ஏனைய துறையினருக்கும் பொதுமக்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

## தேவையற்ற பயணங்களை மேற்கொள்ள .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுப்பதற்காகவே மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.

மக்கள் சுகாதார சட்டதிட்டங்களைத் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும். அப்படிப் பின்பற்றவில்லை என்றால், கொரோனா அலை மீண்டும் ஏற்படக்கூடும்.

மாகாணங்களுக்கு இடையில் பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும் மக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் - என்றார்.

# எனது அமைச்சின் செயலருடன் பணியாற்ற முடியாமல் உள்ளது

## மஹிந்தவிடம் கல்வி அமைச்சர் முறையீடு

தனது அமைச்சின் செயலாளருடன் இணைந்து பணியாற்ற முடியாமல் உள்ளது எனக் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அறிவித்துள்ளார்.

குறித்த பதவிக்கு வேறு ஒரு பொருத்தமான நபரை நியமிக்குமாறும் தினேஷ் குணவர்தன பிரதமரிடம் தெரிவித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், குறித்த பதவிக்காக வேறு ஒரு நபரின் பெயரையும் கல்வி அமைச்சர் இதன்போது பிரதமரிடம் பரிந்துரைத்துள்ளார் எனவும் அறிய முடிகின்றது.



இது குறித்து ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவிப்பதோடு, தான் ஜனாதிபதியிடம் கலந்தாலோசிக்கிறேன் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கல்வி அமைச்சருக்குப் பதிலளித்துள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.